இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 02.01.2026

# பழனிசாமியின் 150 ஆவது பொய்!

நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 ஆவது நாள் ஆக்குவோம் என்று சொல்லி இருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி. அவர் சொல்லும் 150 ஆவது பொய்யாக இதைச் சொல்லலாம்.

“நூறு நாள் வேலைத் திட்டம் ரத்து செய்யப்படுவதாக தவறான தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி வருகிறார். 100 நாள் வேலைத் திட்டத்தை மத்திய அரசு 125 நாளாக உயர்த்தி இருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும். ஊதியம் உயர்த்தப்பட்டு தடையில்லாமல் பணிகள் வழங்கப்படும்” என்று சொல்லி இருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

குடியுரிமைச் சட்டத்தால் எந்தச் சிறுபான்மையினரும் பாதிக்கப்பட மாட்டார்கள், மூன்று வேளாண் சட்டங்களால் எந்த விவசாயியும் பாதிக்கப்பட மாட்டார் என்று பா.ஜ.க.வின் அனைத்து சதித் திட்டங்களுக்கும் முட்டுக் கொடுத்த பழனிசாமி, இப்போது நூறு நாள் வேலைத் திட்டத்துக்கும் முட்டுக் கொடுக்கத் தொடங்கி இருக்கிறார்.

**அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கியது மட்டும்தான் தவறு என்று ஒரு அறிக்கையை வெளியிட்டுக் கழன்று கொண்ட பழனிசாமி, இப்போது ஒட்டு மொத்தமாக ஒன்றிய அரசின் திட்டத்தை ஆதரிக்கத் தொடங்கி விட்டார். ரெய்டுகளுக்குப் பயந்தும், தனது நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளவும் பழனிசாமி படும் பாடு பரிதாபமாக இருக்கிறது. அவரது அசிங்க அரசியல் ஒவ்வொரு விவகாரத்திலும் அம்பலப்பட்டு நிற்கிறது.**

2021 நவம்பர் மாதம், பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். அதில், “2021-2022 ஆம் நிதியாண்டில் ஒன்றிய அரசிடமிருந்து தமிழ்நாட்டிற்கு விடுவிக்கப்பட்ட ரூ.3524.69 கோடியில் மொத்தத் தொகையும் 15.09.2021 வரை தொழிலாளர்களின் கணக்கில் வரவு வைத்து முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதன் பிறகு இத்திட்டத்திற்கு நிதி ஏதும் விடுவிக்கப்படாத காரணத்தால், 1-11-2021 அன்றுள்ளவாறு 1178.12 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியம் வழங்கப்படாமல், நிலுவையாக உள்ளது” என்பதை அப்போது சொல்லி இருந்தார் முதலமைச்சர். அதன் பிறகுதான் நிதியை விடுவித்தார்கள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய 4,034 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுக்காததைக் கண்டித்து தமிழ்நாடு முழுக்க மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்களை கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் தி.மு.க. நடத்தியது பழனிசாமிக்குத் தெரியுமா? 100 நாள்களுக்கான பணத்தையே பா.ஜ.க. தரவில்லை. அந்த பா.ஜ.க. 125 நாள் வேலை தரப் போகிறதாம். பழனிசாமி, 150 நாள் வேலை தரப்போகிறாராம். ‘கேட்பவன் கேனை என்றால் கேரளாவில் எருமை ஏரோப்ளேன் ஓட்டுதாம்’ என்று ஒரு பழமொழி உண்டு. அப்படித்தான் இருக்கிறது பழனிசாமியார் பேச்சும்.

ஒன்றிய அரசு 60 விழுக்காடு - மாநிலங்கள் 40 விழுக்காடு என நிதிப் பகிர்வு முறை என்று மாற்றப்பட்டு இருப்பது பழனிசாமிக்குத் தெரியுமா? ஒன்றிய அரசின் திட்டமானது மாநில அரசின் தலையில் 40 விழுக்காடு கட்டப்பட்டுள்ளது அவரது கண்ணுக்குத் தெரிகிறதா இல்லையா?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு 100 நாள் வேலைத் திட்டத்தில் 30 முதல் 40 நாட்கள் வேலைகள் தரப்பட்டது என்பது ‘நானும் ஒரு விவசாயி’ என்று சொல்லிக் கொள்ளும் பழனிசாமிக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் ஏதாவது கிராமத்துக்குச் சென்று அவரே கேட்கட்டும்! அவர்களிடம் போய் 150 நாள் வேலை தரப் போகிறேன் என்று சொல்லட்டும். அப்போது மக்கள் சொல்லும் பதில், அவர் இதுவரை வாழ்நாளில் கேட்காத பதிலாக இருக்கும்.

2021-ஆம் ஆண்டு முதல் 7.6 கோடி தொழிலாளர்களின் நூறு நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டப்பணி அட்டைகள் நீக்கப்பட்டன. இப்போதும் அதுதான் நடக்கப் போகிறது. இதனை பழனிசாமியால் தடுக்க முடியுமா? தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும், அனைவர் உரிமைகளையும் காவு கொடுத்த முதுகெலும்பு இல்லாத பழனிசாமியால் இது முடியுமா?

எந்த மாநிலத்துக்கு எவ்வளவு தொகை என்பதை ஒன்றிய அரசு தான் இனி நிர்ணயம் செய்யும். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி கிடைக்கும், எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு குறைவான நிதி கிடைக்கும் என்பதை நாடு அறியும்.

ஏன் ஒழுங்காகப் பணம் கொடுக்கவில்லை என்று மகாராஷ்டிரா, ஜார்கண்ட், மேற்கு வங்கம், பீகார், ராஜஸ்தான் மாநில ஆளுநர்களுக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது பழனிசாமிக்குத் தெரியுமா?

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் இந்தத் திட்டத்தை எந்த வகையில் எல்லாம் சிதைக்க முடியுமோ அந்த வகையில் எல்லாம் சிதைத்தார்கள். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது முதல் முறையாக, முழுமையாகப் பணம் தரவில்லை.

இந்தியா முழுமைக்கும் 2021-22 இல் 98,468 கோடி ரூபாய் ஒதுக்கியது ஒன்றிய அரசு. 2023-24 நிதியாண்டில் இத்திட்டத்திற்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இதன் மூலமாக 100 நாள் வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊதியம் குறைக்கப்பட்டதை உணரலாம்.

எதிர்பார்க்கப்பட்ட பட்ஜெட் மதிப்பீடான ரூபாய் 73 ஆயிரம் கோடியை விட 18 சதவிகிதம் குறைவாகவும், 2022-23 நிதியாண்டிற்கான திருத்தப்பட்ட மதிப்பீடான ரூபாய் 89 ஆயிரம் கோடி விட 33 சதவிகிதம் குறைவாகவும் இருந்ததை ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிபரங்களே சொல்கின்றன.

100 நாட்களுக்கு அனைவருக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்றால் 2.72 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதை எந்த ஆண்டும் பா.ஜ.க. அரசு செய்யவில்லை.

**2.72 லட்சம் கோடி தர வேண்டிய இடத்தில் 60 ஆயிரம் கோடி கொடுத்தால் எத்தனை பேருக்கு வேலை கிடைத்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. எந்த நோக்கத்திற்காக 100 நாள் வேலைத் திட்டம் தொடங்கப்பட்டதோ, அத்திட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு படுகொலை செய்து விட்டது. இப்போது அதற்கு பவுடர் போட்டுக் கொண்டு வருகிறார்கள். சோளக்காட்டு பொம்மைக்கு உயிர் ஊட்டிக் கொண்டிருக்கிறார் உளறல் பழனிசாமி.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், இந்து குழும இயக்குநர் என்.ராம் அவர்கள் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான் அவர்கள் ஆங்கில புத்தாண்டையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

# தமிழ்நாட்டின் சுயமரியாதையை நிலைநாட்டும் ஆண்டாக 2026 மலரட்டும்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**அன்புடையீர் வணக்கம்!**

*கழக உடன் பிறப்புகளுக்கும் - ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் என்னுடைய இனிய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*பிறக்கின்ற 2026-ஐ நாம் அனைவரும் நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் வரவேற்று மகிழ்வோம்.*

*தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு, பிளவுவாத சக்திகளுக்கு நம்முடைய ஒற்றுமையின் வலிமையைக் காண்பித்த ஆண்டாக 2025 அமைந்திருந்தது.*

*ஏதாவது செய்து, உணர்ச்சிகளைத் தூண்டி மக்களைக் கூறுபோடலாம் என முயன்றவர்கள், முனை முறிந்து நின்ற காட்சி தான் கடந்த ஆண்டின் சிறப்பு!*

*மும்மொழிக் கொள்கைத் திணிப்பு, தொகுதி மறுவரையறை, நிதிப் பங்கீட்டில் பாரபட்சம், கீழடிக்கு அங்கீகாரம் மறுப்பு, ஆளுநரின் அடாவடி, எஸ்.ஐ.ஆர் என ஒன்றிய அரசின் எல்லா அதிகார அத்துமீறல்களையும் ஓரணியில் எதிர்த்து*

*2025-இல் தமிழ்நாடு வரலாறு படைத்திருக்கிறது.*

*ஒன்றிய அரசின் அடக்குமுறைகளுக்கு இடையே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அனைத்துத் துறைகளிலும் உச்சம் தொட்டது. குறிப்பாக, 11.19 சதவிகிதத்துடன் நாட்டிலேயே இரட்டை இலக்க வளர்ச்சியைக் கண்ட ஒரே மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்தது.*

*கல்வி வளர்ச்சித்திட்டங்கள், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் தொழில் முதலீடுகள், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகள் நியமனம் என நாம் அடைந்துள்ள உயரங்களை ஒட்டுமொத்த இந்தியாவும் பாராட்டுகிறது.*

*விளையாட்டுத்துறையை பொறுத்தவரை, ஏராளமான சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை, தமிழ்நாட்டில் நடத்தினோம். தமிழ்நாட்டு வீரர்கள் பலர் உலகெங்கும் பதக்கங்களைக் குவித்து பெருமை சேர்த்துள்ளனர்.*

*தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிலும், நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் பயனடைந்தோர் ஒருவராவது இருக்கிறார் என்பதையும், 2025 உறுதிப்படுத்தி இருக்கிறது.*

*கழக இளைஞர் அணியை எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டின் வார்டு, கிளை மற்றும் பூத் வரை நிர்வாகிகளை நியமிக்கும் பணியைத் தொடங்கினோம்.*

*உலகில் ஈடு இணையில்லாத வகையில், 5 இலட்சம் நிர்வாகிகள்,*

*50 இலட்சத்துக்கும் அதிகமான உறுப்பினர்கள் என கருப்பு - சிவப்பு ராணுவமாக இளைஞர் அணியை கட்டமைத்து வருகிறோம்.*

*‘அறிவுத் திருவிழா’ எனும் ஆற்றல்மிகு நிகழ்வை இளைஞர் அணி முன்னெடுத்தது.*

*சமீபத்தில், ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் கவனத்தை ஈர்க்கும் வகையில், திருவண்ணாமலையில் வடக்கு மண்டல கழக இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பை வெற்றிகரமாக நடத்தினோம்.*



*75 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் நம் கழகம், இன்றைக்கும் இளமைத் துடிப்போடு இருக்கிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சிகளே சாட்சி.*

*இப்படி, எண்ணற்ற ஆக்கப்பூர்வமான பணிகளை 2025-இல் நாம் மேற்கொண்டிருக்கிறோம்.*

*மலரப்போகும் 2026ஆம் ஆண்டில், இந்தப் பணிகளை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்வதே நம் இலக்கு.*

*இன்னும் சில மாதங்களில், சட்டமன்றத் தேர்தல் வரவிருக்கிறது. இந்தத் தேர்தல் என்பது, தமிழ்நாட்டின் ‘உரிமைகளைக்’ காப்பதற்கான தேர்தல் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் பாதுகாப்பதற்கான தேர்தல்.*

*குறிப்பாக, அண்மையில் வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில், பெயர் விடுபட்டுப்போன வாக்காளர்கள், கழகத்தின் BLA-2 நிர்வாகிகள் மூலம் மீண்டும் விண்ணப்பம் அளிப்பது மிக மிக அவசியம்.*

*இதற்கான பணிகளை ஜனவரி 18-வரை மேற்கொள்ளலாம் என்பதால், விழிப்போடு இருந்து ஒவ்வொருவரும் தங்களுடைய வாக்குரிமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.*

*தமிழ்நாட்டுக்குள் மதம்பிடித்து ஓடி வரத்துடிக்கும் பாசிச சக்திகளையும், அவர்களுக்குப் பாதைப் போட்டுக் கொடுக்கும் பழைய - புதிய அடிமைகளையும் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வீழ்த்த வேண்டும். இது தி.மு.கழகத்தின் பொறுப்பு மட்டுமல்ல, ஒட்டு மொத்த தமிழ்நாட்டின் கடமை.*

*திராவிட மாடல் 2.0 ஆட்சியில் புதிய திட்டங்களும், மாநில உரிமைக்கான குரலும் புதுவேகத்துடன் பெருகும்! இந்தியாவில் மட்டுமல்ல, உலக நாடுகளுடன் போட்டியிடும் வளர்ச்சியை தமிழ்நாடு எட்டும்!*

*ஏழாவது முறையாக கழக ஆட்சி அமைந்திட - ‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்ற உரிமைக்குரல் 2026-இல் மீண்டும் ஓங்கி ஒலித்திட நாம் அனைவரும் உறுதியேற்போம்.*

***தமிழ்நாட்டின் அடையாளத்தையும் - சுயமரியாதையையும் நிலைநாட்டும் ஆண்டாக 2026 மலரட்டும்!***

***புத்தாண்டில் அனைவரின் வாழ்வும் சிறக்கட்டும் - செழிக்கட்டும்!!***

**உங்கள்**
**உதயநிதி ஸ்டாலின்**

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! வைகை ஸ்கேன். டாக்டர்.டி.பாண்டியராஜ் ஏற்பாட்டில்

# தேனியில் 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் - மதிய உணவு!

## வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. வழங்கினார்!

*தேனி, ஜன. 2 -*

*தேனி வடக்கு மாவட்டத்தில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமை வகித்து 3 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைத்தும், 3 ஆயிரம் பேருக்கு இலவச வேஷ்டிகள் மற்றும் சேலைகளை வழங்கும் பணியினை துவக்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட அவைத் தலைவர் செல்ல பாண்டியன், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம்,*

*தேனி தெற்கு நகரப் பொறுப்பாளர் நாராயண பாண்டியன், வடக்கு நகரப் பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன், பெரியகுளம் நகரச் செயலாளர் முகமது இலியாஸ், பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வக்கீல் பாண்டியன், தேனி அல்லிநகரம் நகர்மன்ற தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டாக்டர் வி.ஆர்.ராஜன், தேனி நகர் மன்ற துணைத் தலைவர் வக்கீல் செல்வம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வக்கீல் ராஜசேகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், உயர் நீதிமன்ற வக்கீல் நிஷாந்த் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசைத்தம்பி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், தேனி நகரத் துணைச் செயலாளர் மகாராஜன், மாவட்டப் பிரதிநிதி பண்ணை ரவி மற்றும் கு.ராம்தாஸ், தேனி வடக்கு மாவட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் இளைஞரணி, மருத்துவர் அணி, மாணவரணி, மகளிர் அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*

### கண்மணி நெடுஞ்செழியன் தலைமை! மேல்மலையனூர் ஒன்றியம் செக்கடிகுப்பத்தில்

# ரூ.8.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

*செஞ்சி, ஜன. 2 -*

*விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கோட்டப்பூண்டி ஊராட்சி செக்கடி குப்பம் கிராமத்தில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8.50 லட்சம் ரூபாய்மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடை கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.*

*மேல்மலையனூர் வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார்.*

*ஊராட்சி மன்ற தலைவர் சரவணன் அனைவரையும் வரவேற்றார்.*

*நிகழ்ச்சியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு 8.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கடையை மக்கள்பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கினார்.*

*நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெய்சங்கர், ஒன்றிய செயலாளர்கள் நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மதுசூதனன், குமார், உதயகுமார், எஸ்.பி.சம்பத், செல்வம், தாஹிரா அப்துல் வகாப், ஜி.பி.ஸ் முருகன், தோப்பு சம்பத், மணிகண்டன், சக்திவாசன், ரமேஷ், ராஜேந்திரன், சண்முகம், அன்பழகன், கண்ணன், ஸ்ரீதர், சக்கரவர்த்தி, லோகு, வசந்தகுமார், அருள்மொழி, உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*




திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு ரயில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற திருச்சி மாவட்ட போகர் சமுதாய நல சங்கத்தின் முதலாம் ஆண்டு விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் வடக்கு மாவட்டச் செயலாளர், காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்லம், ரங்கசாமி, துரைராஜ், துரைப்பாண்டியன், மோகன் தாஸ், கவிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.